பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 05 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர், பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி தீவிரவாதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கை என்று இந்திய ராணுவம் கூறியுள்ளது.

2. இந்திய ராணுவத்தின் நடவடிக்கையை பல்வேறு தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

3. விண்வெளித்துறையில் இந்தியா மகத்தான சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

4. சீக்கிய மதகுருவான ஸ்ரீ குருநானக்கின் குருத்வாரா அமைந்துள்ள கர்தார்பூர் பகுதிக்கு பக்தர்கள் செல்லும் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

5. தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>>

நாட்டின் அமைதியை குலைக்கவும், மத ரீதியான பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கிலும் பஹல்காமில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதாக மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இன்று பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், பஹல்காமில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொடூரமானது என்றார்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீது இந்திய ராணுவம் ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலை நடத்தியதாக அவர் கூறினார்.

நள்ளிரவு மணி ஒன்று ஐந்து முதல், ஒன்று முப்பது மணி வரை நடத்தப்பட்ட இந்த ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் ஒன்பது தீவிரவாத முகாம்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத நடவடிக்கைளுக்கு ஆதரவு அளிக்கும் பாகிஸ்தான், அதன் அடையாளமாகவே மாறி வருகிறது என்று திரு மிஸ்ரி கூறினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விசாரணையில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்பட்டு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வருங்காலத்தில் மேலும் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் அளித்த தகவல்களின் அடிப்படையில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பஹல்காமில் உறவினர்கள் கண்முன்னே ஈவு இரக்கமின்றி பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த அவர், 2008 மும்பை தாக்குதலுக்கு பிறகு அப்பாவிகள் அதிக அளவில் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள **Resistance Front** தீவிரவாத அமைப்பு லஷ்கர் இ தொய்பாவுடன் தொடர்பில் உள்ளதால், இந்த கொடூர தாக்குதலை பாகிஸ்தான் கட்டவிழ்த்துள்ளது நிரூபணமாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் 22-ஆம் தேதி நடத்தப்பட்ட பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, ஏப்ரல் 25-ஆம் தேதி ஐ நா பாதுகாப்பு சபை வெளியிட்ட அறிக்கையிலிருந்து **Resistance Front** தீவிரவாத அமைப்பின் பெயரை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அழுத்தம் கொடுத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பஹல்காம் தாக்குதலில் தங்களுக்கு தொடர்பு இல்லை எனக்கூறி சர்வதேச சமுதாயத்தை நம்ப வைக்கும் முயற்சியில் அந்நாடு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தீவிரவாத தாக்குதல் நடத்திய அமைப்புகள் மற்றும் தீவிரவாதிகளை அடையாளம் கண்டு, தக்க பதிலடி கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சர் உள்ளிட்டோருக்கு, பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், முக்கிய நிகழ்ச்சிகளில் மட்டுமே இவர்கள் கலந்துகொள்வார்கள் என்று கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கர்னல் சோபியா குரேஷி, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே பாகிஸ்தானில் தீவிரவாத குழுக்கள் செயல்பட்டு வரும் இடங்கள் உறுதி செய்யப்பட்டு, அவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டுப்பகுதியின் மறுபுறத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதியில், 21 தீவிரவாத முகாம்கள் செயல்பட்டு வருவதை அவர் பட்டியலிட்டார்.

கடந்த 30 ஆண்டுகளில் இந்த முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அவற்றில், அப்பாஸ் முகாம், பர்னாலா முகாம் உள்ளிட்ட ஐந்து தீவிரவாத நிலைகள் மீது துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டு அவை அழிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இவற்றில், லஷ்கர் இ தொய்பா, இஸ்புல் முஜாஹிதீன், ஜெய்ஷ் இ முகமது, உள்ளிட்ட அமைப்புகளின் முகாம்கள் செயல்பட்டு வந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் பாகிஸ்தானின் எல்லைப்பகுதியில் உள்ள **Muridke, Sarjal, Bahawalpur, Mehmoona Joya** ஆகிய முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பொதுமக்கள் பாதிப்பு அடையாத வகையில் துல்லிய தாக்குதலாக நடத்தப்பட்டதாகவும், பாகிஸ்தானின் ராணுவ நிலைகள் எதுவும் தாக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த சந்திப்பின்போது விமானப்படையின் விங் கமாண்டர் வியோமிகா சிங்கும் உடனிருந்தார்.

தற்போதைய நிலை குறித்து விளக்கம் அளித்திருப்பதாகவும், கூடுதல் தகவல்களை அவ்வப்போது செய்தியாளர்களுக்கு வழங்க உள்ளதாகவும் வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி குரேஷியா, நார்வே, நெதர்லாந்து நாடுகளுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்திய ராணுவத்தின் நடவடிக்கையை பல்வேறு தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

ஆபரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதத்திற்கு தக்க பதிலடி கொடுத்த இந்தியப் படைகளால் மிகுந்த பெருமிதம் அடைவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தீவிரவாதத்தை வேரோடு அகற்ற ஏறிய வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

இந்திய ராணுவத்தின் முப்படைகள் நடத்திய தாக்குதலுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள செய்தியில், தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் ஆபரேஷன் சிந்தூர் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மத்திய அமைச்சர்கள் திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு ஜெ பி நட்டா, இணையமைச்சர் திரு எல். முருகன் ஆகியோரும் வரவேற்றுள்ளனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி வெளியிட்டுள்ள பதிவில், இந்திய ராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடியது என்று கூறியுள்ளார்.

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான இந்தியா ராணுவத்தின் நடவடிக்கைக்கு தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்திற்கான நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ள பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், இதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி கூறியுள்ளார்.

நாட்டை பாதுகாக்க ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தமிழகத்தில் உள்ள பொதுமக்களும் வரவேற்றுள்ளனர்.

*(சவுண்ட் பைட் - பொதுமக்கள் - 86 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, ஜம்மு, ஸ்ரீநகர், லே, ஜோத்பூர், அம்ரிஸ்டர், **'Bhuj**, ஜாம் நகர், சண்டிகர், ராஜ்கோட் செல்லும் விமானங்கள் இம்மாதம் 10-ஆம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

இந்த விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

சீக்கிய மதகுருவான ஸ்ரீ குருநானக்கின் குருத்வாரா அமைந்துள்ள கர்தார்பூர் பகுதிக்கு பக்தர்கள் செல்லும் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள இந்த குருத்வாராவுக்கு செல்லும் பாதை பாதுகாப்பு காரணங்களுக்காக மறு அறிவிப்பு வரும்வரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

விண்வெளித்துறையில் இந்தியா மகத்தான சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக விண்வெளித்துறை கண்டுபிடிப்புகள் தொடர்பான மாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர், நாட்டின் விண்வெளித்துறை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பல்வேறு சாதனைகள் பற்றி தெரிவித்த அவர், சந்திரயான் உள்ளிட்ட விண்வெளிப்பயண திட்டங்கள் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் கூறினார்.

நிலவின் தென்துருவத்தை முதலில் அடைந்த நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-15 என்ற செட் கணக்கில், இந்தியாவின் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியனை வென்றார்.

---------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

கொழும்பில் நடைபெற்றுவரும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில், முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 235 ரன் எடுத்துள்ளது.

<<<<<<END>>>>>>